A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 99 / 2022**

திரு. கந்தசாமி,
எண்.28, வ.உ.சி தெரு,
உள்ளகரம், சென்னை – 600 061.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு.தொண்டைமான்)

எதிர்

1. உதவி மின் பொறியாளர்/நங்கநல்லூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 016.

2. உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 016.

3. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. நரேஷ் பாபு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி
திரு D. கோவிந்தராஜு, உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 28-11-2022**

**கேட்புரை நாள்: 09-02-2023**

**ஆணை நாள்: 27-02-2023**

28.11.2022 அன்று பெறப்பட்ட திரு. கந்தசாமி, எண்.28, வ.உ.சி தெரு, உள்ளகரம், சென்னை – 600 061 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 96/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.02.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மின்கட்டணம் செலுத்தாததால் மின் துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்பு எண்.244–194–72ஐ மறு மின் இணைப்பு வழங்க கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 09–244–194–72–இல் கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்பட்டு பின்னர் எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி மின் அளவியை எதிர்மனுதாரர் கழற்றி சென்று விட்டதால் மறு மின் இணைப்பு கோரி மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மறு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1–ஐ அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1, 21.10.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 சென்னை மின்பகிர்மான வட்டம் /தெற்கு–1, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.10.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

> *Vigilance Enquiry நடைபெறுவதால் அதன் முடிவு கிடைத்தவுடன் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க செயற்பொறியாளர் /இ&ப/ கிண்டி அவர்களை இம்மன்றம் அறிவுறுத்துகிறது . மேலும் இது குறித்து எடுத்த நடவடிக்கையை இம்மன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி அவர்களை இம்மன்றம் அறிவுறுத்துகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.02.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளருக்கு பதிலாக திரு.தொண்டைமான் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. நரேஷ் பாபு , செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி மற்றும் திரு D. கோவிந்தராஜு, உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1 மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன் றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:

5.1 மேல்முறையீட்டாளர் தான் பெற்ற மின் இணைப்பு எண் 09-244/194/72 LM – 51 ஐ தொற்று நோய் காரணமாக பயன்படுத்த முடியாமல் கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்பட்டது என்றும் பின்னர் எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி மின் மீட்டரை கழட்டி சென்று விட்டதாகவும், மேலும் மீண்டும் மின்னிணைப்பு பெற 3.11.2021 ல் மனு அளித்து 9.11.2021 அன்று அபராதத்துடன் முழு கட்டணத்தையும் செலுத்தியதாகவும் (மின் கட்டண ரசீது எண் 2409678 தொகை ரூ .1895/-) கட்டணம் செலுத்திய நாளிலிருந்து பணிகள் தொடங்கப்படாததால் மன்றத்தில் தெரிவித்ததாகவும், மன்றம் வழங்கிய ஆணையில் மின்னிணைப்பு எத்தனை நாட்களுக்குள் வழங்கப்படும் அல்லது வழங்கப்பட மாட்டாது என குறிப்பிடப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் வழங்கிய ஆணையில் மன்றத்தின் தலைவர் மனுதாரரின் மின்னிணைப்பு எண் 244-194-72 LIVE இல் உள்ளதாக தெரியவருகிறது என குறிப்பிட்ட தலைவர் அதனை உறுதிபடுத்தும் அளவில் குறிப்பிடவில்லை. உதவிச் செயற்பொறியாளர் / இ.ப/நங்கநல்லூர் அவர்கள் உரிய ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் வழங்கும் பட்சத்தில் புதிய மின்னிணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளதை பதிவு செய்த மன்றத்தின் ஆணையில் மன்றத்தின் கண்டுபிடிப்பாக வேறு முகவரியில் இயங்கி வருவதாக குறிப்பிட்டும், இது குறித்து vigilance enquiry நடைபெற்று வருவதாக தெரிய வருவதாக குறிப்பிட்ட மன்றம் அதனையும் உறுதிபட தெரிவிக்கவில்லை. முடிவு கிடைத்தவுடன் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டு ஆணை நிறைவடைகிறது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 விண்ணப்பித்து பெறப்பட்ட மின்னிணைப்பு தொற்று நோய் காரணமாக பயன்பாட்டில் இல்லாதது உண்மை, காலம் பல கடந்தாலும் செலுத்த வேண்டிய தொகையினை அபராதத்துடன் செலுத்தியதை ஏற்றுக்கொண்டதும் உண்மை. ஆனால் கட்டணம் செலுத்திய பின் இணைப்பு வழங்காததும், எவ்வித முன்னறிவிப்பின்றி மின்

மீட்டர் அகற்றியதும் எந்த விதியில் குறிப்பிட்டுள்ளது அதனை மன்றம் குறிப்பிட தவறியுள்ளதும், vigilance enquiry நடைபெற்று வருவதாக தெரிய வருகிறது என குறிப்பிட்ட மன்ற குறிப்பின்படி அதற்கும் வழங்க வேண்டிய மின்னிணைப்புக்கும் என்ன சம்பந்தம் உள்ளது . இதில் தவறு செய்திருந்நதால் அத்தவறுக்கு பொறுப்பானவர் மீது அல்லவா நடவடிக்கை எடுத்திட வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின்னிணைப்பு பெற்றிட்ட மின்நுகர்வோர் தவறு புரியவில்லையே, மன்றம் இப்படி ஒரு தீர்வு வழங்கியிருப்பது தவறு செய்தவர்களுக்கு துணை நிற்பதாக கருத வேண்டியுள்ளது, துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பினை வழங்கியும் , ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு இழப்புகள் வழங்கியும் நிர்வாக தவறு புரிந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை வேண்டியும் பாதிப்புக்கு உரிய தீர்வு வழங்க இயலாத பட்சத்தில் உரிய நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஆணை வழங்கிடும் கடிதத்தில் குறிப்பிட்டு வழங்கிடவேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 6.0 Arguments of the Respondent:

6.1 The Respondent submitted that the LT SC No.244-194-72 has been effected in the name of Thiru M. Kandhasamy, No.28 VOC St., Ullagaram, Nanganallur, Chennai 600 061 on 30.6.2003 under LT Tariff LM 51 as per the TNERC Tariff Rules in force at that time.

6.2 The Respondent submitted that the Appellant submitted a petition to the Chairman / CGRF / CEDC / South – I / Chennai on 3.8.2022. Based on the petition submitted by the Appellant in the CGRF, the Assistant Engineer / O & M/ Nanganallur informed that the SC was reconnected on 9.11.21 and submitted a report to the CGRF. The petition was heard by CGRF on 29.8.2022 where the petitioner was present.

6.3 உதவி செயற்பொறியாளர் /இ&ப/நங்கநல்லூர் கள ஆய்வு மேற்கொண்டதில் மின்னிணைப்பு எண் 244-194-72 ற்கான மின் பயனீட்டு கட்டண அட்டையில் திரு . கந்தசாமி, வலம்புரி விநாயகர் கோயில் , மேடவாக்கம் மெயின் ரோடு , உள்ளகரம்

சென்னை 61 என்ற முகவரியில் பயன்பாட்டில் உள்ளது . ஆனால் 03.11.2021 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக எண் 28 வ.உ.சி. தெரு, உள்ளகரம், சென்னை 61 என்ற முகவரியில் மீண்டும் புதிய மின்னிணைப்பை கோரியுள்ளதாக எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 194 செக்டார் என்பது அலெக்சாண்டர் என்ற பெயரில் உள்ளது . 195 செக்டார் என்பது வ .உ.சி. தெரு, உள்ளகரம் என்ற பெயரில் உள்ளது . இரண்டும் வெவ்வேறு பகுதிகள் ஆகும். 190 செக்டார் என்பது மதியழகன் தெரு பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது . மின்னிணைப்பு எண் 244-194-72 ல் 4/2019 மாதத்திற்குண்டான மின் கட்டணம் செலுத்தாததால் 10.6.2019 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது . மறு இணைப்பு கோரியதிற்கிணங்க ரூ .1,895/- செலுத்தியதால் மறு மின்னிணைப்பு 9.11.2021 அன்று செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும், எண் 3, மேடவாக்கம் மெயின் ரோடு என்ற முகவரியில் பிள்ளையார் கோவில் இருந்ததாகவும் , மேடவாக்கம் மெயின் ரோடு விரிவாக்கம் செய்தபொழுது கோவிலை இடித்து விட்டதாகவும் அதற் கு பதில் சற்று தொலைவு தள்ளி வேறு ஒரு கோவிலை கட்டியதாகவும் விசாரணையில் தெரிய வருகிறது . மின்னிணைப்பு எண் 244-194-72 என்பது வலம்புரி விநாயகர் கோவிலுக்கான மின்னிணைப்பாக தான் ஏற்கனவே Commercial tariff ல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள தாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மின்னிணைப்பு எண் 244-194-70, 244-194-71, 244-194-73 மற்றும் 244-194-74 ஆகிய மின்னிணைப்புகள் யாவும் கணினியில் பார்த்த பொழுது மேடவாக்கம் மெயின் ரோட்டில் உள்ள மின் இணைப்புகளாக உள்ளது . 194 செக்டார் ஆனது அலெக்சாண்டர் என பெயரில் உள்ளது . செக்டார் மாற்றம் அல்லது பெயரில் தற்போது வரை எந்த தவறும் இல்லை என்பது தெரிய வருகிறது . மெயின்ரோடு பகுதியில் முன்பு இருந்த கடைகள் இடிக்கப்பட்டது . இதனால் மின் அளவிகள் அகற்றப்பட்டது . பின் அப்பகுதிகளில் இடம் இருந்தவர்கள் அதே மின் அளவியை பயன்படுத்தி வரு வதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரர் கோரிய (மின்னிணைப்பு எண் 244–194–72) மின்னிணைப்பு இருந்த இடம் தற்போது காலியாக இருப்பது தெரிய வருகிறது. மனுதாரர் திரு. கந்தசாமி அவர்களுடைய இடத்தை ஆய்பு செய்தபொழுது எண் 28 வ.உ.சி. தெரு, உள்ளகரம் என்ற முகவரியில் வீடு அமைந்துள்ளது அந்த இடம் அரசு புறம்போக்கு இடமாக தெரிய வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே மின்னிணைப்பு எண் 244–194–72 வேறு பெயரில் தவறுதலாக மாற்றப்பட்டு இருப்பதாலும் மின்வாரிய விதிப்படி புதிய மின்னிணைப்பு வழங்க இயலாது என்பதனை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திரு. கந்தசாமி என்கிற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி தவறான வழியில் புதிய மின்னிணைப்பு பெற முயற்சி செய்வதாக விசாரணையில் தெரிய வருகிறது. எனவே எவ்வித அபராக தொகையும் செலுத்த வேண்டியதில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் மனுதாரர் கோரியபடி மேற்படி மின்னிணைப்பில் ஏற்பட்ட தவறுதலுக்காக அப்பொழுது பணியாற்றிய மின் பொறியாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் மின்னிணைப்பு எண்.244–194–72 ல் உள்ள வைப்பு தொகையை மட்டுமே மனுதாரரின் கணக்கில் வரவு வைக்கப்படுமே தவிர வேறு எவ்வித அபராக தொகை ஏதும் வழங்க இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இவ்வழக்கை ஒட்டிய கீழ்கண்ட வினாக்கள் எழுகின்றன.

1. மின்கட்டணம் செலுத்தாததால் மின் துண்டிப்பு செய்யப்பட்ட மின்னிணைப்பு எண்.244–194–72ஐ மீண்டும் தனக்கு வழங்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதுதானா?

2. மேல்முறையீட்டாளருக்கு நிவாரணம் ஏதும் வழங்க இயலுமா?

8.0 **<u>கேள்வி–1ற்கான தீர்வு:</u>**

8.1 மேல்முறையீட்டாளர் எண் .28, வ.உ.சி தெரு , உள்ளகரம், சென்னை – 600061 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தொற்று நோய் காரணமாக மின் இணைப்பு09–244–194–72, LM–51ஐ பயன்படுத்திட முடியாததால் மின் இணைப்பு 20–04–2019 அன்று துண்டிக்கப்பட்டதாகவும், தனக்கு பொருத்தப்பட்டிருந்த மின் மீட்டரை எதிர்மனுதாரரின் அலுவலகத்தினர் கழற்றி சென்றதாகவு ம், அம்மின்னிணைப்பினை மீண்டும் பெற்றிட 03–11–2021 அன்று மனு அளித்து 09–11–2021 அன்று செலுத்த வேண்டிய கட்டணத்தினை அபாரத்துடன் சேர்த்து செலுத்தியதாகவும் ஆனால் இதுவரை தனக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

8.2 இது சம்பந்தமாக எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் நுகர்வோர் பேரேட்டின் படி மின் இணை ப்பு எண் . 09–244–194–72 ஆனது வல ம்புரி விநாயகர் கோவில் , மேடவாக்கம் மெயின் ரோடு, உள்ளகரம், சென்னை – 600061 என்ற முகவரியில் வணிக பயன்பாட்டிற்க்கு வழங்கப்பட்டதாகவும் தற்சமயம் மேடவாக்கம் மெயின் ரோடு விரிவாக்கம் செய்ததோடு கோவிலை இடித்து விட்டு சற்று தொலைவு தள்ளி வேறு ஒரு கோவிலை கட்டியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மின் இணைப்பு எண் . 09–244–194–72ல் குறிப்பிட்டுள்ள செக்டர் 194 என்பது அலெக்சாண்டர் என்ற பெயரில் உள்ளதாகவும், வ.உ.சி தெரு உள்ளகரம் என்பது செக்டர் 195க்கு ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

8.3 இதன் மூலம் மேல்முறையீட்டாளர் குறிப்பிடும் மின் இணைப்பு எண் . 09–244–194–72 வழங்கப்பட்ட இடமும் தற்சமயம் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் இடமும் ஒன்றல்ல என்பது தெரியவருகிறது.

8.4 மேலும், மின் இணைப்பு எண். 09–244–194–72 ஆனது 20–04–2019 அன்று துண்டிப்பு செய்யப்பட்டு 03–11–2021 அன்று மேல்முறையீட்டாளரால் மறு இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது . இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 22(6)(i)ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (RESTORATION):*

*(1) xxx*

*(2) xxx*

*(3) xxx*

*(4) xxx*

*(5) xxx*

*(6) (i) மின்னிணைப்பு, மின் கட்டணங்கள் செலுத்தாமைக்காக ஆறு மாதங்களுக்கு மேலாக துண்டிக்கப்பட்டிருக்கிற போது, நுகர்வோர், கீழே சொல்லப்பட்ட கால அளவிற்குள் செலுத்த முன் வந்து , உள்ளபடியே நிலுவையைச் செலுத்துவதற்கும் மற்றும் கீழேயுள்ள (ii) ஆம் கூறில் உள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் சம்மதிப்பார் எனில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் , அறிவிப்புக் காலத்திற்கு அப்பால் கால நீட்டிப்பு வழங் கலாம் மற்றும் மின்னிணைப்பிற்கான மின் தொடர்கள் அகற்றப்படாதிருந்து, துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்கு மறுபடியும் மின்னிணைப்பு கொடுக்க வசதியாக இருக்குமானால் , உடன்பாட்டுப்பத்திரத்தின் முடிவுறுத்தத்தை ரத்து செய்யலாம்."*

| *வகை* | *துண்டிக்கப்பட்ட மின் சேவையின் மறு இணைப்பிற்கான கால அளவு* |
|---|---|
| *(1)* | *(2)* |
| *உயர் அழுத்த (HT) நுகர்வோர்* | *மின் துண்டிப்புத் தேதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள்* |
| *தாழ் அழுத்த (LT) வேளாண் நுகர்வோர்* | *–மேற்படி–* |
| *பிற தாழ்வழுத்த நுகர்வோர்* | *மின் துண்டிப்புத் தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள்* |

8.5 மேற்கூறிய விதியை ஆராயும் போது எந்தவொரு தாழ்வழுத்த மின் நுகர்வோரும் (வேளாண் தவிர ) மின் கட்டணம் செலுத்தாமைக்காக ஆறு மாதங்களுக்கு மேலாக துண்டிக்கப்பட்டிருக்கிறபோது, மின் துண்டிப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் நிலுவைத் தொகையை செலுத்தி மறு மின் இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

8.6 இவ்வழக்கில் மின் இணைப்பு எண் . 09-244-194-72 ஆனது 20-04-2019 அன்று துண்டிப்பு செய்யப்பட்டு 03-11-2021 அன்று மேல்முறையீட்டாளரால் மறு இணைப்பு வேண்டி இரண்டு வருடங்களுக்கு பிறகு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மின்வழங்கல் விதி 22(6)(i)ற்கு முரணாக மேல்முறையீட்டளாரின்

மின்னிணைப்பை மறு இணைப்பு செய்து உத்திரவிட மின்குறைத் தீர்ப்பாளருக்கு அதிகார வரம்பில்லை என தீர்வு செய்யப்படுகிறது.

8.7 மின் இணைப்பு எண் . 09-244-194-72 இருந்த இடம் தற்போது காலியாக இருப்பதாலும் மேல்முறையீட்டாளரின் இடத்தை ஆய்வு செய்த பொழுது எண் .28, வ.உ.சி தெரு , உள்ளகரம் என்கிற முகவரியில் வீடு அமைந்துள்ளதாகவும் அந்த இடம் அரசு புறம்போக்கு இடமாக இருப்பதும் தெரிய வருகிறது . எனவே, மேல்முறையீட்டாளர் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு புதிய மின் இணைப்பு கோரும் பட்சத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்பகிர்மான விதி த்தொகுப்பு 27(12)ல் குறிப்பிட்டள்ளவாறு "புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப் பின்மைச் சான்றிதழை அளித்தால் மின் இணைப்பு வழங்கப்படும்" என்று குறிப்பிட் டுள்ளபடி தடையில்லா சான்று பெற்று புது விண்ணப்பமாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின் இணைப்பு உரிய நடவடிக்கை எடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

9.0 <u>கேள்வி-2ற்கான தீர்வு:</u>

9.1 மேல்முறையீட்டாளர் காலம் கடந்து மின் துண்டிப்பு செய்யப்பட்ட இரண்டு வருடங்கள் கழித்து மறு மின் இணைப்பு கோரும் கோரிக்கை ஏற்புடையதாக இல்லாத பட்சத்தில் அவருக்கு இழப்பீடு எதுவும் வழங்க இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது.

10.0 <u>முடிவுரை:</u>

10.1 மின் இணைப்பு எண் . 09-244-194-72 துண்டிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழித்து மறு மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

10.2 இருப்பினும், புதிய மின்னிணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

10.3 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லாத காரணத்தால் அவருக்கு நிவாரணம் ஏதும் வழங்க இயலாது.

10.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் . 99/ 2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. கந்தசாமி, – BY RPAD
எண்.28, வ.உ.சி தெரு,
உள்ளகரம், சென்னை – 600 061.

2. உதவி மின் பொறியார்/நங்கநல்லூர்ன,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 016.

3. உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 016.

4. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

5. மேற்பார்வை பொறியாளர், –By Email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.